


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி அக்டோபர் 31 * 2025 * மலர் -1 * இதழ்-151 * VOL-1 * ISSUE-151 விலை ரூ.3 * பக்கம் -4



தேவர் ஜெயந்தியையொட்டி மதுரை கோரிப்பாளையத்தில் உள்ள அவரது உருவச்சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் கனிமொழி எம்.பி., அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஐ.பெரியசாமி, மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், முன்னாள் அமைச்சர் பொன்முத்துராமலிங்கம் மற்றும் தளபதி எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.



தேவர் குருபூஜையையொட்டி ராமநாதபுரம் மாவட்டம் கமுதி பசும்பொன்னில் உள்ள அவரதுநினைவிடத்தில்துணைஜனாதிபதிசி.பி.ராதாகிருஷ்ணன்மரியாதைசெலுத்தினார். அருகில் பா.ஜ.க. மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரன், எச்.ராஜா மற்றும் பலர் உள்ளனர்.

### பசும்பொன்னில் தேவர் குருபூஜை:

# துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் மரியாதை!

## எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்களும் அஞ்சலி!!

கமுதி, அக்.31–

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அடுத்துள்ள பசும்பொன்னில் விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் மக்களவை உறுப்பினருமான பசும்பொன் உ.முத்து ராமலிங்கத்தேவர் 118–வது ஜெயந்தி விழாவும் 63–வது குருபூஜை விழா 28, 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. 28 ஆம் தேதி காலை 7 மணிக்கு ஓதுவார்களின் மங்கல இசை, கணபதி ஹோமம், சிவாச்சாரி யர்கள் வேத மந்திரங்கள் முழங்க, லட்சார்ச்சனை பெருவிழாவுடன் குருபூஜை விழா தொடங்கியது. மேலும் காலை 11 மணிக்கு பிரசாதம் வழங்குதல், மாலை 6 மணிக்கு திருவிளக்கு பூஜை, இரவு 9 மணிக்கு தேரோட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடந்தன. 29ஆம் தேதி அரசியல் விழா நடந்தது. இன்று அரசு விழாவாகவும் நடைபெறுகிறது. விழாவிற்கு



வரும் பொது மக்களுக்கு அரசியல் கட்சி மற்றும் சமுதாய அமைப்பினர் சார்பில் மிகப்பெரிய அளவில் அன்னதானகூடங்கள்அமைத்து பொதுமக்களுக்கு அன்ன தானம் வழங்கினார்கள். பொதுமக்களுக்கான அடிப்படை தேவைகள், சாலை சீரமைப்பு உள்ளிட்ட பணிகளை கமுதி ஊராட்சிஒன்றியநிர்வாகம் செய்தது. நேற்று காலை துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் தேவர் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். அவருடன் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் பலர் சென்றிருந்தனர். அதன் பிறகு காலை 9.30 மணியளவில் தமிழக முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் ,தேவர் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். அவருடன் தமிழக அமைச்சர்களும் , எம்.எல்.ஏ.க்க ளும் சென்றிருந்தனர்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள், பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், சமுதாய தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர் தேவர் நினை வாலயத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்கள். ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ, முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், சசிகலா, அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன், பா.ம.க. தலைவர் ஜி. கே.மணி ஆகியோரும் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்கள்.

முன்னதாக மதுரையில் தேவர் சிலைக்கு, மருது சகோதரர்சிலைக்குமாலை அணிவித்தனர்.

மேலும் கமுதியில் இருந்து பசும்பொன் கிராமம் வரையிலும் 4300–க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, 2 கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. தென் மண்டல ஐ.ஜி.பிரேம் ஆனந்த்சின்கா தலைமையில் ஒரு டி.ஐ.ஜி., 20 சூப்பிரண்டுகள், 27 கூடுதல் சூப்பிரண்டுகள் உள்பட மாவட்டம் முழுவதும் 8 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

### கோரிப்பாளையம் தேவர் சிலைக்கு மரியாதை

முன்னதாக நேற்று காலை 8.30 மணிக்கு மதுரை கோரிப்பாளையத்தில்உள்ளதேவர்சிலைக்கு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

சிலைக்குஅடியில்வைக்கப்பட்டிருந்த தேவர் படத்திற்கு மலர் தூவினார். அதன் பிறகு மாரியம்மன் கோவில் தெப்பக்குளத்தில் உள்ள மருதுபாண்டியர்கள் சிலைக்கு மு.க. .ஸ்டாலின் மாலை அணிவித்தார். பிறகு கார் மூலம் அங்கிருந்து பசும்பொன்னுக்கு புறப்பட்டு சென்றார். மதுரையில் நடந்த நிகழ்ச்சிகளில் கனிமொழி எம்.பி. , அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஐ.பெரியசாமி, மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி. ராஜா, முன்னாள் அமைச்சர் பொன்முத்துராமலிங்கம் மற்றும் தளபதி எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர்மணிமாறன்,முன்னாள் எம்.எல்.ஏ. முத்துராமலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மதுரை தெப்பக்குளத்தில் உள்ள மருது சகோதரர் சிலைகளுக்கு மாலை அணிவித்தார்.

அவருடன் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜு, ஆர்.பி.உதயகுமார் மற்றும் ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



# புதுக்கோட்டையில் மதுபாட்டுகளுக்கு தாலி கட் டி வாழ்வுரிமைக் கட்சி சார்பில் நூதன போராட்டம்!

புதுக்கோட்டை,அக்.31

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட அசோக் நக ரில் புதுக்கோட்டை ஆலங்குடி சாலையில் புதிதாக மனமகிழ் மன்றம் என்ற பெயரில் எஃப்எல்டு மதுபான கடை திறக்கப்பட்டுள்ளது.

இந்த கடை திறக்கப்படுவதற்கு முன்பில் இருந்தே அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் பல்வேறு அரசியல் கட்சியினரும் அந்தக் கடைக்கு எதிராக தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டத்தி ல் ஈடுபட்டனர்.

மேலும் அந்தப் பகுதியில் கடை திறக்க கூடாது என் று நீதிமன்றத்திலும் தமிழக வாழ்வுரிமை கட்சி சார் பில் வழக்கு தொடர்ந்த நிலையில் நீதிமன்றம் மாவட்ட நிர்வாகத்திற்கு இதுகுறித்து தகவல் கேட்டிரு ந்து. இந்நிலையில் மாவட்ட நிர்வாகம் அதையெல்லாம் மீறி அசோக் நகர் பகுதியில் மனமகிழ் மன்றம் என் ற பெயரில் எஃப்எல் 2 காலை 11 மணியிலிருந்து இரவு 11 மணி வரை செயல்படும் மதுபான கடைக் கு அனுமதி அளித்து தற்போது அந்த கடை திறக் கப்பட்டு செயல்பட்டு வருவது கண்டிக்கத்தக்கது.

என்று கூறியும் புதிதாக திறக்கப்பட்டுள்ள எஃப் 2 மதுபான கடைக்குஎதிராகவும்புதுக்கோட்டையில் தொடர்ந்து இது போன்ற மதுபான கடைகள் மருத் துவமனை குடியிருப்பு பகுதிகள் உள்ளிட்ட இடங்க ளில் தொடர்ந்து திறக்கப்பட்டு வருவதால் புதுவை யாக மாறப்போகும் புதுக்கோட்டை அதனை முன்கூ ட்டியே நாம் தடுக்க வேண்டும் என்ற முழக்கத்தோடு தற்போது அசோக் நகரில் திறக்கப்பட்டுள்ள எஃப்எல்டு மதுபான கடையை உடனடியாக மூட வலியுறுத்தி தமிழக வாழ்வுரிமைக் கட்சியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# மின்சாரம் தாக்கி, ஆற்றில் மூழ்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.23லட்சம் நிவாரண உதவிகள்!

## க.பொன்முடி எம்.எல்.ஏ. வழங்கினார்!!

திருவெண்ணெய்நல்லூர், அக்.31

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் பெரும்புகை கிராமத்தில் கரும்பு வெட்ட செல்லும் பொழுது கரும்பு தோட்டத்தில் கடந்த 19.09.2025 அன்று முகையூர் ஒன்றியம் கொங்கராயநல்லூர் கிராமத்தை சார்ந்த திரு.ராமச்சந்திரன் (வயது36), சின்னராசு (வயது30) ஆகிய ஒரே குடும்பத்தை சேர்ந்த சசோதரர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர். மின்சாரம் தாக்கி உயிரிழந்த இரண்டு நபர்களின் குடும்ப வாரிசு தாரர்களுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில் நிவாரணதொகையாக தலா ரூ.10 இலட்சம் வீதம் என இரண்டு நபர்களுக்கு ரூ.20 இலட்சம் நிவாரணஉதவி தொகைக்கான காசோலைகள் மற்றும் திருவெ ண்ணெய்நல்லூர் பேரூராட்சியை சேர்ந்த செந்தில் என்பவரின் மகன் எத்திராஜ் (16) என்ற சிறுவன் கடந்த 11.10.2025 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம் வாணாபுரம் வட்டம் திருவரங்கம் அரங்கநாதர் கோவிலுக்கு அருகில் உள்ள தென்பெண்ணையாற்றில் குளித்துக்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக ஆற்றில் அடித்து செல்லப்பட்ட இறந்து போன சிறுவனின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது



நிவாரணநிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான நிவாரண உதவி தொகையையும் இறந்தவர்களின் குடும்பத்தினரின் வீட்டிற்கு சென்று திருக்கோவிலூர் சட்டமன்றஉறுப்பினர்க.பொன்முடி,மாவட்ட ஆட்சித்தலைவர்ஷேக்அப்துல்ரஹ்மான் ஆகியோர் வழங்கினார்கள். இதில் திருக்கோவிலூர் நகர்மன்ற தலைவர் முருகன், , மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் பி.வி.ஆர்.விஸ்வநாதன், ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர் லூயிஸ் ஒன்றிய கவுன்சிலர் சத்யராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு தெருவில் இயங்கி வரும் இ.1181 திருவெண்ணெய்நல்லூர்வேளாண்மைஉற்பத்தியாளர்கள்கூட்டுறவுவிற்பனைசங்கத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் புதிய நகைக்கடன் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் விஜயசக்தி , விழுப்புரம் சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் சிவபழனி ஆகியோர் புதிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் புதிய நகைக்கடன் வழங்கி தொடங்கி வைத்தனர். இதில் பயிற்சித் துணைப் பதிவாளர் மயூரி , மௌனிகா , செயலாட்சியார் சந்திரா, சங்க செயலாளர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர் .

# மாநில அரசு ஊழியர்களுக்கும் அகலவிலைப்படி உயர்வினை உடனடியாக வழங்க கோரி தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் மன்றம் சண்முகநாதன் தமிழக முதல்வருக்கு கோரிக்கை!

புதுக்கோட்டை,அக்.31

மத்திய அரசுஊழியர்களுக்கு வழங்கிய அகவிலைப்படி உயர்வினை மாநில அரசு ஊழியர்களு க்கும் உடனடியாக வழங்கிட வேண்டும் என தமிழ் நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநி ல பொதுச்செயலாளர் மன்றம் சண்முகநாதன் தமி ழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரிய ர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் சண்முகநாதன் விடுத்துள்ள கோரிக் கை மனுவில் கூறியுள்ளதாவது :

எல்லாருக்கும் எல்லாம் என்கிற உயரிய முழக்கத் தோடு இந்தியஒன்றியமுழுமையும்வியந்துதிரும்பிபார்க்கும்படி திராவிடமுன்மாதிரிஆட்சியைவழங்கிக்கொண்டிருக்கும் எங்களின் விடிவெள் ளியே. மத்திய அரசு 1.7.2025 முதல் தனது ஊழியர் களுக்கு மூன்று சதவீத அகவிலைப்படி உயர்த்தி வழங்கி உள்ளது. தமிழகத்தில் உள்ள மத்திய அரசு பணியாளர்கள், தமிழக அரசு ஊழியர்கள், மற்றும் ஆசிரியர்களை விட கூடுதலான அகவிலைப்படியினை அனுப வித்து வருகிறார்கள். தமிழகத்தில் ஒரே விலைவாசியினைசந்திக்கும்மத்தியஅரசுபணியாளர்கள் தமிழக அரசு பணியா ளர்களுக்கு இடையிலான அகவிலைப்படி சதவீதம் முரண்பட்டு உள்ள நிலையில் தற்போது 01.07. 2025 முதல் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி உயர்வுகாலதாமதம் ஆவதுதங்களையே நம்பி உள்ள எங்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்குகிறது.

எனவே 1.7. 2025 முதல் மத்திய அரசு தன் பணியாளர்களுக்கு வழங்கி உள்ள 3% அகவிலைப்படியி னை போல் தமிழ்நாட்டின் 16 லட்சம் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில் நிலுவையுடன் அகவிலைப்படியினை தமிழக முதல்வர் வழங்கிட வேண்டும் என தனது கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார்.





திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சி 10வது வார்டு பகுதியில் சிறப்பு வார்டு கூட்டம் கோயில் வளாகத்தில் நடைபெற்றது.

## வாணியம்பாடி நகராட்சி 10 வது வார்டு பகுதியில் சிறப்பு கூட்டம்!

வாணியம்பாடி, அக்.31

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சி 10வது வார்டு பகுதியில் சிறப்பு வார்டு கூட்டம் கோயில் வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வார்டு உறுப்பினரும் திமுக நகர செயலாளருமான வி.எஸ். சாரதி குமார் தலைமை வகித்தார். கூட்டத்தில் நகராட்சி சுகாதார அலுவலர் அப்துல் ரஹீம், நகராட்சி நிர்வாக அலுவலர் ஜெய்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு பகுதி மக்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகள் கேட்டறிந்தனர். பின்னர் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு நிறைவேற்றினர். இதில் கணேஷ் கமால், சிரஞ்சீவி மற்றும் பகுதி மக்கள் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம், வார்டு எண்.74க்குட்பட்ட பகுதிகளிலுள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நாயக்கர் தோட்டம், பூசாரிபாளையம் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமினை மேயர் .கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளுக்கு உடனடி ஆணையினை வழங்கினார். உடன் மேற்கு மண்டலத் தலைவர் தெய்வயானை தமிழ்மறை, உதவி செயற்பொறியாளர் சவிதா. மாமன்ற உறுப்பினர் .சங்கர். நிர்வாக அலுவலர் திரு.லட்சுமணன். உதவி வருவாய் அலுவலர் திருஃபெரோஸ்கான், மண்டல சுகாதார அலுவலர் திரு.வீரன். உதவி பொறியாளர் கார்த்திகேயன், சுகாதார ஆய்வாளர் சலைத் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

## விவசாயிகள் சம்பா சிறப்பு பருவ நெல் பயிருக்கு காப்பீடு; மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்!

கிருஷ்ணகிரி,அக்.31

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2025 26 ஆம் ஆண்டு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சம்பா/சிறப்பு பருவத்தில் நெல் பயிர்காப்பீடு செய்ய பாகலூர், ஒசூர் மத்திகிரி நாகரசம்பட்டி, கெலமங்கலம். இராயக்கோட்டை பெரியமுத்தூர். காவேரிப்பட்டிணம். போச்சம் பள்ளி, உத்தனப்பள்ளி சூளகிரி, அஞ்செட்டி கல்லாவி சாமல்பட்டி சிங்காரப்பேட்டை ஆலப்பட்டி மற்றும் ஊத்தங்கரை ஆகிய 17 பிர்க்காக்கள் அறிவிக்கை செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இப்பகுதியில் உள்ள சம்பா சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவான நடப்பு அக்டோபர் மாதம் 31ந் தேதிக்குள்தங்கள்விருப்பபத்தின் பேரில், அருகாமையில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். தேசிய மயமாக்ககப்பட்ட வங்கி அல்லது பொது சேவைமையங்களை (இசேவை மையங்கள் நேரடியாக அணுகி எக்கருக்கான நெல் பயிர்க் காப்பீட்டுக் கட்டணமாக ரூ.57450 மட்டும் செலுத்தி காப்பீடு செய்து பயன் பெறலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும்போது, முன்மொழிவு விண்ணப்பம்.

பதிவு விண்ணப்பம். கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு பசலிக்கான அடங்கல்,

வங்கிக்கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து கட்டணத்தொகையை செலுத்திய பின் அதற்கான ரசீதையும் பெற்று கொள்ளலாம்.

விவசாயிகள் காப்பீடு செய்ய கடைசி நாளான 3110.2025 வரை தாமதிக்காமல் முன்கூட்டியே காப்பீடு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விபரங்க ளுக்கு தங்கள் வட்டாரத்தில் உள்ளவேளாண்மைஉதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ளவும். மேலும் 14447 என்ற கட்டணமில்லா எண்ணிலும் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை கேட்டு தெளிவு பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

### வந்தவாசியில் மக்கள் கோரிக்கையை முன்னிறுத்தி

## வாக்குறுதிகளை நிறைவேற்றாத தி.மு.க. அரசை கண்டித்து பா.ஜ.க. கண்டன ஆர்ப்பாட்டம்!

வந்தவாசி, அக்.31

திருவண்ணாமலை மாவட்டம் வடக்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் வந்தவாசி புதிய பேருந்து நிலைய அணுகு சாலையில்,மக்கள் கோரிக்கைகளை முன்னிறுத்தி பாஜக கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட பொதுச்செயலாளர் பி.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர்கள் பாஸ்கரன், சாசா வெங்கடேசன், பொதுச் செயலாளர்கள்குருலிங்கம், சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் நவநீதி, சமூக ஊடக பிரிவு மாவட்ட தலைவர் கே.குணசேகர், மாவட்ட பொதுச்செயலாளர் முத்துசாமி , மாவட்டச் செயலாளர்கள்ராஜ்மான்சிங் பாண்டுரங்கன் முன்னாள் மாவட்ட செயற்குழு உறுப்பினர் துரை நாடார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரத் தலைவர் ஆர் சுரேஷ் அனைவரை யும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட வடக்கு மாவட்ட தலைவர் கவிதா வெங்கிடேசன்,மாவட்ட பொதுச் செயலாளர் கே. வெங்கட்ராமன், பொருளாளர் அருள் கண்டன உரையாற்றினர்.வந்தவாசி நகராட்சியில் 3 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்ட குடிநீர் இப்போது 10 நாட்கள் ஆகியும் வழங்காமல் குடிநீர் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நகராட்சி நிர்வாகத்தை கண்டித்தும் வந்தவாசி நகராட்சிக்கு உட்பட்ட 1.2.3 வார்டுகளுக்கு சுடுகாட்டு பாதை அமைக்காததை கண்டித்தும்கோட்டை காலனி தெருவில் சமுதாயக்கூட கட்டிடப் பணி நிறைவடைந்தும் பல வருடங்களாக திறக்காததை கண்டித்தும்தென்னாங்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு கல்லூரி திறக்கும் நேரத்தில் பேருந்து வசதிகளை ஏற்படுத்தவும் இடிக்கப்பட்டதெள்ளூர்ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டிடத்தை கட்டித்தரக் கோரியும் வெண்குன்றம் மலையை சுற்றி கிரிவலம்பபாதை உருவாக்கித்தர கோரியும் 800 ஆண்டுகள் பழமையான சீயமங்கலம் குடைவரை கோயிலை சீரமைக்க கோரியும் , ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. , மண்டல தலைவர்கள் செல்வேந்திரன், முருகன், சரவணன், ஏழிலரசன், தயாளன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ராம்குமார், நிர்வாகிகள் சரசு மோகன் அரங்கன் சதீஷ் ஹரிஹர மணிகண்டன் செந்தில் குமார் வினோத் குமார்,



மற்றும் 200க்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன முழக்கங்கள் எழுப்பினர். நிறைவாக மேற்கு ஒன்றிய பாஜக தலைவர் மணிகண்டன் நன்றி கூறினார்.

## அடுத்த 3 முதல் 5ஆண்டுகளில் 100 கோடி இந்திய ரூபாயை முதலீடு செய்ய ஆம்வே இந்தியா நிறுவனம் திட்டமிட்டுள்ளது!

கோவை, அக்.31

ஆம்வே நிறுவனத்தின் உற்பத்திப் பயணத்தின் 10 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் நிறுவனத்தின் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான மைக்கேல் நெல்சன் இந்த வாரம் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்.



உலகளாவிய செயல்பாடுகளில் பங்கேற்கும் அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய ஆம்வேயின் மூன்று உலகளாவிய உற்பத்தி மையங்களில் ஒன்றான இந்தியாவின் உத்தி சார்ந்த முக்கியத்துவத்தை வலுப்படுத்தும் ஒரு மைல்கல்லே இந்த வருகை. இந்த வலிமையான அடித்தளத்தின் மீது கட்டமைத்து ஆம்வே வணிக உரிமையாளர் / விநியோகஸ்தர்களின் திறன்களை மேலும் மேம்படுத்தவும், அதன் நேரடி இருப்பை வலுப்படுத்தி விரிவுபடுத்தவும், வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்த்தவும் அடுத்த மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் 100 கோடி இந்திய ரூபாயை முதலீடு செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது. தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின் முதல் முறையாக இந்தியாவிற்கு நெல்சன் வருகை புரிகிறார்.

இது ஆம்வேயின் உலகளாவிய வளர்ச்சி சார்ந்த உத்தியில் நாட்டின் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுவதோடு இந்த வட்டாரத்தில் உள்ளடக்கிய மற்றும் நிலையான முன்னேற்றத்திற்கான நிறுவனத்தின் நீண்டகால உறுதிப்பாட்டை மறுபடியும் உறுதிசெய்கிறது.

ஆம்வேயின் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான மைக்கேல் நெல்சன் கூறுகையில் "ஆம்வேயின் உலகளாவிய தொலைநோக்குப் பார்வையின் மையத்தில் இந்தியா இருந்து வருகிறது.

இது அதன் டிஜிட்டல் அதிகாரம் பெற்ற மக்கள் தொகை, துடிப்பான, இளம் பணியாளர்கள் மற்றும் செழிப்பான கிக் பொருளாதாரம் ஆகியவற்றால் இயக்கப்படும் ஆற்றலின் ஒரு மையமாகும். ஆம்வேயைப் பொறுத்தவரை இந்தியா மாற்றத்தின் உச்சத்தில் இருக்கிறது. இந்த மாற்றத்தை இயக்க முக்கியமான முன்னுரிமைகளில் கவனம் செலுத்தி, குறிப்பிடத்தக்க முதலீடுகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம்.

நாட்டின்துடிப்பு, பன்முகத்தன்மை, ஆற்றல் மற்றும் தொழில்முனைவோர் மனப்பான்மை ஆகியவை பொருளாதார அதிகாரம் மற்றும் நல்வாழ்வு மூலம் சிறந்த வாழ்க்கையை வாழ மக்களுக்கு உதவும் ஆம்வேயின் நோக்கத்துடன் துல்லியமாக ஒத்துப்போகின்றன. உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பத்தாண்டை நாங்கள் கொண்டாடும் இந்த வேளையில், நாங்கள் கட்டமைத்ததைப் பற்றி பெருமைப்படுகிறோம். வரவிருக்கும் மிகச் சிறந்த வாய்ப்புகளை எண்ணி அதிகமான உத்வேகத்தைப் பெறுகிறோம்." நிறுவனத்தின்நேரடிஇருப்பை விரிவுபடுத்துவதன் மூலமும், மறுவடிவமைப்பு செய்யப்பட்ட தளவமைப்புகள், அர்ப்பணிப்புள்ள பயிற்சி மண்டலங்கள் மற்றும் மேம்பட்ட சேவை அனுபவங்களுடன் ஏற்கனவே உள்ள கடைகளை ஈடுபாட்டுடன் கூடிய மையங்களாக மாற்றுவதன் மூலமும் விநியோகஸ்தர் மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதை இந்த 100 கோடி இந்திய ரூபாய் முதலீடு, நோக்கமாகக் கொண்டுள்ளது. தயாரிப்பைப் பற்றிய அறிவு, தரநிலையை உறுதிப்படுத்துதல், வாடிக்கையாளர் ஈடுபாட்டை வலுப்படுத்தும் சான்றளிப்பு மற்றும் தொழில்முனைவோரின் வெற்றியை உறுதுப்படுத்துவதில் உதவி ஆகியவற்றின் மூலம் விநியோகஸ்தர்களை வலிமைப்படுத்துவதிலும் இது கவனம் செலுத்தும். ஆம்வே இந்தியாவின் நிர்வாக இயக்குனர் ரஜ்னீஷ் சோப்ரா கூறும் போது,

"இந்தியா தனது விக்சித் பாரத் 2047 என்ற தொலைநோக்குப் பார்வையை நோக்கி முன்னேறி வரும் இந்த வேளையில் உள்நாட்டில்எங்கள்இருப்பை வலிமைப்படுத்துவதன் மூலம், மக்கள் மற்றும் புத்தாக்கங்களில் முதலீடு செய்வதன் மூலமும் இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் பயணத்திற்குப் பங்களிப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம் என்றார்.



கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம், வார்டு எண். 54க்குட்பட்ட காமராஜர் சாலை, ராமசாமிநகர்பகுதியில்அமைந்துள்ளசுகாதாரஆய்வாளர்அலுவலகத்தில்தூய்மைப்பணியாளர்களின் வருகை பதிவேடு மற்றும் தூய்மைப் பணிகளின் செயல்பாடுகள் குறித்து மாநகராட்சி ஆணையாளர் திரு.மா.சிவகுரு பிரபாகரன், நேரில் சென்று. பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் நகர்நல அலுவலர் மரு.மோகன், உதவி ஆணையர் திரு.ராம்குமார். உதவி செயற்பொறியாளர் திரு.எழில், மண்டல சுகாதார அலுவலர் திரு.ராஜேந்திரன், உதவி பொறியாளர் திரு.ராஜேஸ்வரன், சுகாதார ஆய்வாளர் திரு.ஜெரால்டுசத்யபுவிதன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

## கார் மோதி கணவன், மனைவி பலி!

நத்தம், அக்.31

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே கோசுகுறிச்சி கும்பச்சாலையை சேர்ந்தவர் ராஜா(55).விவசாயி. இவரது மனைவி பெசலி(45),இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் இரவு நான்குவழிச்சாலையில் உள்ள கட்டுப்பாட்டு அறை அருகே இருக்கும் தனது மருமகன் வீட்டிற்கு சென்று விட்டு நேற்று அதிகாலை வீட்டிற்கு செல்வதற்காக துவரங்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தனர்.அப்போது மதுரையில் இருந்து சென்னை நோக்கி சென்ற சென்னையை சேர்ந்த மாடசாமி(28) என்பவர் அதிவேகமாக ஓட்டி வந்த கார் அவர்கள் இருவர் மீது பயங்கரமாக மோதியது.இதில் தூக்கிவீசப்பட்ட இருவரும் இரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக துடிதுடித்து பலியாகினர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்த கணவன், மனைவி உடலை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். மேலும் கணவன், மனைவி அதிகாலையில் விபத்தில் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

### நாகப்பட்டினம் கலெக்டர் அலுவலகம் முன்பு

## தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்!

நாகப்பட்டினம்,அக்.31

நாகப்பட்டினம் கலெக்டர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு ஊரக வளர்ச்சித்துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு மாநில மகளிர் அணி செயலாளர் கவுசல்யா தலைமை தாங்கினார். மாவட்ட தலை வர் ரவிச்சந்திரன் முன்னிலை வைத்தார். மாவட்ட செயலாளர் மதன்ராஜ் வரவேற்றார்.



தூய்மை பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தை 10ஆயிரமாக உயர்த்தி அதனை ஊராட்சி மூலம் வழங்க வேண்டும். மக்கள் நலப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு காலம் வரை ஊதியத்தை, காலம் முறை ஊதியமாக நிர்ணயத்து பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களின் பனிக்காலத்தில் கருத்தில் கொண்டு சிறப்பு காலம் வரை ஊதியம் ரூ. 15 ஆயிரம் வழங்க வேண்டும். ஊராட்சி செயலாளர்களுக்கு தேர்வுநிலை, சிறப்புநிலை, தேக்கநிலை ஊதியம் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

முடிவில் மாவட்ட பொருளாளர் சங்கர் நன்றி கூறினார்.

இதில் தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்கள், திட்ட ஒருங்கினைப்பாளர்கள், சுகாதார ஊக்குனர்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குனர்கள், கணினி இயக்குநர்கள், ஊராட்சி செயலாளர்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் தற்செயல் விடுப்பு எடுத்து கலந்து கொண்டனர்.

## விழுப்புரத்தில் வி.சி.கட்சி சார்பில், பஞ்சமி நிலங்களை மீட்போம் கருத்தரங்க கூட்டம்!



விழுப்புரம்,அக்.31

விழுப்புரத்தில் வி.சி., கட்சி சார்பில், பஞ்சமி நிலங்களை மீட்போம் கருத்தரங்ககூட்டம்நேற்று நடந்தது. தெற்கு மாவட்ட செயலாளர் பெரியார் வரவேற்றார். . வி.சி., பொது செயலாளர் ரவிக்குமார் எம்.பி., தலைமை வகித்தார்.

இந்திய கம்யூ., மாநில செயலர் வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். மா.கம்யூ., அரசியல் தலைமைகுழு உறுப்பினர் பாலகிருஷ்ணன் பேசியதாவது:

தமிழகத்தில் அரசியல் தேவைக்கு ஏற்ப, கம்யூ., மற்றும் வி.சி., கட்சிகள் கூட்டணிகளை மாறி, மாறி அமைக்கிறது என்றாலும், சாதிய ஒடுக்குமுறைகள், பஞ்சமி நிலம் மீட்பு போன்ற மக்கள் பிரச்னைக்கு ஒன்றிணைந்து குரல் எழுப்பி வருகிறோம். இப்போது, புதுசாக புறப்பட்டு வந்துள்ள அரசியல் தலைவருக்கு, இது போன்ற சாதிய ஒடுக்குமுறைகள், நில உரிமை மீட்பு பிரச்னைகள் பற்றியெல்லாம் தெரியாது. ஆனால், அவர் வரும் போது, எதற்கென்றே தெரியாமல் அவரை பார்க்க மக்கள் திரளும், சமூக அவலம் உருவாகியுள்ளது.

அவரது, கூட்டத்தின்போது இறந்த 41 பேரின் குடும்பத்தை நேரில் சென்று பார்க்கவில்லை. ஆறுதல் சொலவில்லை. வடமாநிலங்களில் தான், திருவிழா கூட்டங்களில் திரண்டு, உயிர் பலிகள் நிகழ்வது நடந்து வந்தது. தற்போது, தமிழகத்திலும் அரசியல் கூட்டத்தால் அந்நிலை வந்துவிட்டது. இறந்தவர்களின் குடும்பத்தினரை அழைத்து, ஆறுதல் கூறும் அரசியல் பண்பாடும் மாறியுள்ளது. கூட்டத்தில் சிக்கி என் பிள்ளை இறந்தாலும் பரவாயில்லை,

என் தலைவரை பார்த்தால் போதும் என கூறும் அளவிற்கு, தமிழக மக்களின் மன நிலை கெட்டுள்ளது. இவற்றுக்கெல்லாம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார். நகர செயலர் இரணியன் நன்றி கூறினார்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் (SPECIAL INTENSIVE REVISION) குறித்து, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி, தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷண குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் (திருப்பத்தூர்) திரு.வரதராஜன், (வாணியம்பாடி) அஜிதாபேகம், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.முருகன், தேர்தல் வட்டாட்சியர் திரு.திருமலை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



# பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 49 லட்சம் மதிப்பீட்டில் 7 ரேஷன் கடைகள் திறப்பு!

தர்மபுரி,அக்.31–

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, பருவதனஅள்ளி புதூர், கொட்டாயூர், பெரிய தோட்டம் புதூர், பூதிப் பட்டி, மஞ்சநாயக்கன அள்ளி, 5வது மைல், பெரியவத்தலாபுரம் ஆகிய ஊர்களுக்கு, பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தலா 7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 7 புதிய நியாய விலை கடை கட்டிடங்களை பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜிகே மணி அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு பென்னாகரம் வட்ட வழங்கல் அலுவலர் முல்லைக்கொடி, கூட்டுறவு சார் பதிவாளர் அம்பிகேஸ்வரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான நிரந்தர பகுதி நேர நியாய விலை கடை, தற்போது அமைத்து தரப்பட்டுள்ளதால் அந்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு

# தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கத்தினர் 500 க்கும் மேற்பட்ட பெண் தூய்மையாளர்கள் ஆர்ப்பாட்டம்!

திருப்பத்தூர் அக்.31–

தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கத்தினர் 16அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மாதம் கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதனையெடுத்து தமிழக அரசு கண்டுக்கொள்ளாததால் ஒருநாள் தற்செயல் விடுப்பு எடுத்து 500க்கும் மேற்பட்ட தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கத்தினர் தங்களின் கோரிக்கைகளை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்றிடக் கோரி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் தூய்மை காவலர்களின் மாதாந்திர ஊதியத்தை ரூபாய் 10,000 ஆக உயர்த்தி ஊராட்சி மூலம் ஊதியத்தை வழங்கிட வேண்டும் எனவும் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களின் பணிக் காலத்தினை கருத்தில் கொண்டு சிறப்பு காலம் வரை ஊதியம் ரூபாய் 15,000 வழங்க வேண்டும் எனவும், கணினி உதவியாளர்களை பணி நிரந்தரம் செய்திட அரசாணை எண் 37 வெளியிட்ட பின்னரும் இது நாள் வரை பணிநிறுத்தம் செய்யவில்லை எனவே கணினி உதவியாளர்களை பணி நேரத்திலும் செய்ய வேண்டும் எனவும் கிராம சுகாதார உறுப்பினர்களுக்கு மாதம் 10,000 ஊராட்சி மூலம் ஊதியம் வழங்கிட வேண்டும் மற்றும் பணி பாதுகாப்பு வழங்கிட வேண்டும் எனவும் தூய்மை காவலர்களுக்கு குடும்ப நலநிதி பிடித்தம் செய்து அவர்கள் இறப்பு எய்தும் போது பணியாளர்களை சிறப்பு காலம் வரை ஊதியத்திலும் 10 ஆண்டுகள் பணி முடிந்தவர்களை காலம் வரை ஊதிய கட்டுக்கும் மாற்றம் செய்து நகராட்சி நிர்வாகத்தை துறையில் பணியாற்றும் தூய்மை பணியாளர்கள் பெரும் ஊதியத்தை வழங்கிட வேண்டும் எனவும் கணினி உதவியாளர்களுக்கு வருதாந்திர ஊதிய உயர்வை அமல்படுத்தி பிஎஃப் பிடித்தும் செய்ய வேண்டும் எனவும் மேலும் பத்து ஆண்டுகள் பணி முடிந்து வட்டார சுகாதார ஒருங்கிணைப்பாளர் களுக்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலும் மாவட்ட சுகாதார ஒருங்கிணைப்பாளர் களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலக நிலையிலும் ஊதிய நிர்ணயம் செய்து வழங்கிட வேண்டும் என 16 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பாக கோஷங்களை எழுப்பி போராட்டம் நடத்தினர்.

# இந்திய பான கலாச்சாரத்தை மாற்றும் நோக்கில் ஓச்சர் ஸ்பிரிட்ஸ், புதுச்சேரியில் அறிமுகம்!

புதுச்சேரி,அக்.31–

புதுச்சேரி, கோவாவில் வெற்றிகரமான பயணத்தை தொடர்ந்து, இந்தியாவின் முன்னணி க்ராஃப்ட் ஸ்பிரிட்ஸ் பிராண்டான ஓச்சர் ஸ்பிரிட்ஸ், நவீன கைவினைசுவைகளைபிரதிபலிக்கும் தயாரிப்புகளுடன் புதுச்சேரியில் காலடி எடுத்து வைத்துள்ளது. நட்டி பெர்ரி ரம், மாம்பழ லெமன் ரம், பீச் & சேரி வோட்கா, குங்குமப்பூ வோட்கா ஆகியவை ₹1,380 விலையில் கிடைக்கின்றன.தனித்துவத்தையும் நவீன சுவையையும் விரும்பும் இளம் தலைமுறைக்கு உருவாக்கப்பட்ட ஓச்சர்ஸ்பிரிட்ஸ், தனித்துவமான சுவை அனுபவத்தையும் மேம்பட்ட தயாரிப்புகளையும் வழங்கும் எதிர் பண்



பாட்டு பிராண்டாக வலுவாக திகழ்கிறது. ஒவ்வொரு தயாரிப்பும் நேரடியாகவும் எளிய மிக்சர்களுடனும் அனுபவிக்க ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. "புதுச்சேரியின் கலை, அறிவு, தனித்தன்மை கலாசாரம் எங்களை ஈர்த்தது. இங்கு எங்கள் விரிவு உணர்ச்சிகளை இணைக்கும் ஒன்று," என ஜான் ரொய்யர், நிறுவனர் – ஓச்சர் ஸ்பிரிட்ஸ் தெரிவித்தார். இந்த அறிமுகம் தென் இந்தியாவில் பிராண்டின் விரிவாக்கத்தில் முக்கிய முன்னேற்றமாக சுட்டிக்காட்டப்படுகிறது. அடுத்த கட்டமாக கர்நாடகாமற்றும் மகாராஷ்டிரா சந்தைகளில் விரைவில் நுழைவப்படுகிறது.புதுச்சேரியில் ஓக்கர் ஸ்பிரிட்ஸ் விநியோகத்தை தேவி வைன்ஸ் மேற்கொள்கிறது. "ஓச்சர் ஸ்பிரிட்ஸ் சந்தைக்கு புதுமையும் தனிச் சிறப்பும் கொண்டு வருகிறது; இது நவீன இந்திய க்ராஃப்ட் பிராண்டின் புதிய தரத்தை அமைக்கும்," என திரு. கே. சேகர், உரிமையாளர் – தேவி வைன்ஸ், தெரிவித்தார். தயாரிப்புகள் தற்போது அனைத்து உயர்தர மது விற்பனை நிலையங்கள் மற்றும் பார்களில் கிடைக்கின்றன.

# சிவகாசி பஸ் ஸ்டாண்டில் கழிவு நீராக மாறிய மழை நீர்!

சிவகாசி, அக்.31–

சிவகாசி பஸ் ஸ்டாண்ட் வளாகத்தில் பஸ் ஏறும் இடத்தில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்குவ01தால் பயணிகள் அவதிப்படுகின்றனர். சிவகாசி பஸ் ஸ்டாண்டிற்கு தினமும் 200 க்கும் மேற்பட்ட முறை அரசு, தனியார் பஸ்கள் வந்து செல்கின்றன. அருகில் உள்ள கிராமங்கள் தவிர சாத்தூர், விருதுநகர் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் உள்ளிட்ட நகரங்களில் இருந்து பல்வேறு பணி நிமித்தமாக தினபயணிகள் அவதிமும் ஏராளமானோர் பஸ் ஸ்டாண்டிற்கு வந்து செல்கின்றனர். இந்நிலையில் பஸ்ஸ்டாண்டின்மேற்குப் பகுதி தாழ்வாக அமைந்துள்ள நிலையில் சிறிய மழை பெய்தாலும் தண்ணீர் தேங்கி விடுகின்றது. தண்ணீர் வெளியேறவே வழியில்லாமல் நாளடைவில் கழிவுநீராகி டெங்கு கொசு உற்பத்தி கேந்திரமாக மாறிவிடுகிறது. பஸ்சுக்காக காத்திருக்கும்பயணிகள் கொசுக்கடியால் பெரிதும் அவதிப்படுகின்றனர். மேலும் துர்நாற்றத்தினாலும் சிரமப்படுகின்றனர். பஸ்சிலிருந்து ஏறி இறங்கும் பயணிகளும் தடுமாறுகின்றனர். பஸ்கள் செல்லும்போது மழைநீர் அடிக்கப்பட்டு பயணிகள் மீது விழுகின்றது. எனவே பஸ் ஸ்டாண்டில் தேங்கியுள்ள மழை நீரை வெளி யேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் எதிர்பார்க்கின்றனர்.

# சிவகாசி கர்ப்பப்பை புற்றுநோய் தடுப்பூசி முகாம்!

சிவகாசி அக்.31–

சிவகாசி ஷ்லெங்க் பொறியியல் கல்லூரி உள்ளக குவார்கள் குழு நர்மதா மருத்துவமனை இன்னர் வீல் கிளப்சிவகாசிபோல்சார்பில்கர்ப்பபைவாய்புற்றுநோய் தடுப்பூசி முகாம் நடந்தது கல்லூரி முதல்வர் அறிவழகன் தலைமை விகித்தார் உலகப் புகார் குழு தலைவர் கோல்டா ஜெயசீலன் கல்லூரி மருத்துவ அதிகாரி, சரோஜா ஒருங்கிணைத்தார் 7000 மாணவர்களுக்கு தடுப்பூசி இலவசமாக வழங்கப்பட்டது நர்மதா மருத்துவமனை மகப்பேறு டாக்டர் நர்மதா இன்னர் வீல் கிளப் சிவகாசி கோல்டு தலைவர் மல்லிகா, செயலாளர் பூர்ண மலை சீரம் நிறுவனம் கிஷோர் வாழ் பாலாஜி பங்கேற்றனர்.

# திருத்தங்கல் ரோட்டில் நடமாடும் மாடுகள்!

சிவகாசி, அக்.31–

திருத்தங்கல் ஸ்டாண்ட் அருகே விரு துநகர் செல்லும் மெயின் ரோட்டில் நடமாடும் மாடுகளால் வாகன ஓட்டிகள் வியத்தில் சிக்குகின்றனர். ரோட்டில் திரியும் மாடுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பஸ் ஸ்டாண்ட் அருகே விருதுநகர் செல்லும் மெயின் ரோட்டில் கோயில் கடைகள் உள்ளது. மேலும் இந்த ரோட்டில் எப்பொழுது மே போக்குவரத்து நிறைந்திருக்கும். பள்ளி கல்லூரி வாகனங்கள் விபத்தில் சிக்கும் வாகன ஓட்டிகள் னங்கள் ஒ ரு சில மாடுகள் ரோட்டின் நடுவிலேயே அமர்ந்து கொள்கிறது. இதனால் எந்த வாகனமும் எளிதில் சென்று வர முடியவில்லை. போக்குவரத்து நிறைந்த ரோட்டில் மாடுகள் நடமாடுவதால் அனைத்து வாகன ஓட்டிகளும் சிரமப்படுவதோடு விபத்திலும் சிக்குகின்றனர். மாடுகள் விலகிச்செல்வதற்காக ஹாரன் அடித்தாலும் இவைகள் கொஞ்சம் கூட நகர்வதில்லை. ஒரு சில மாடுகள் பயந்து ஓடி வாகன ஓட்டிகளை விபத்திற்கு உள்ளாக்குகிறது. அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு அவசரத்திற்கு வருகின்ற ஆம்புலன்ஸ் வாகனத்திற்கும் இதே நிலைதான் ஏற்படுகின்றது.

எனவே இப் பகுதியில் நடமாடுகின்ற மாடுகளை அகற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என வாகன ஓட்டிகள் எதிர் பார்க்கின்றனர்.

# டி.கொளத்தூர் ஊராட்சி நிர்வாகத்திற்கு பெற்றோர்கள் நன்றி!

உளுந்தூர்பேட்டை,அக்.31–

திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட டி.கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 100மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர்.பள்ளி வளாகத்தில் புல் செடி கொடி மண்டி கிடக்கிறது விச பூச்சி பள்ளி வளாகத்தில் வருகிறது என சுத்தம் செய்து தர வேண்டும். என பெற்றோர்கள் கோரிக்கை வைத்தனர்.கோரிக்கை ஏற்று உடனே JCB இயந்திரம் சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது இதனால் பெற்றோர்கள் ஊராட்சி நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்தனர்.

# தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக சங்கம் சார்பாக 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்!

செங்கல்பட்டு, அக்.31–

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரியும் தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கத்தின் சார்பாக 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை அட்டை அணிவித்து மாவட்ட அளவிலான பெருந்திறல் முறையீடு செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட தலைவர் வசுமதி, மாவட்ட செயலாளர் பாரதி, மாவட்ட பொருளாளர் லோகநாயகி, ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்கம் மாவட்டச் செயலாளர் முகமது உசேன், இணை செயலாளர் ராஜலட்சுமி, அரசு ஊழியர் சங்கம் வட்ட செயலாளர் வெங்கடேசன், மருத்துவ ஆய்வக நுட்புணர் முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் மனோகரன், மருத்துவ ஆய்வு ஆய்வக நிபுணர் தங்கமா ஆகியோர்கள் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கம் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்க இணைச் செயலாளர் மோகன் குமார் நன்றி உரையாற்றினார்.







## புதுக்கோட்டை அருகே

# அரசு மகளிர் பள்ளியில் சர்வதேச காலநிலை மாற்ற விழிப்புணர்வு ஊர்வலம்!

புதுக்கோட்டை,அக்.31–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள கீரமங்கலம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் சர்வதேச காலநிலை மாற்ற விழிப்புணர்வு ஊர்வலம் பள்ளியில் நடைபெற்றது.

விழிப்புணர்வு ஊர்வலத்திற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் வள்ளிநாயகி ஊர்வலத்தை தொடங்கி வைத்து தலைமை தாங்கினார்.

நடப்பாண்டின் சர்வதேச காலநிலை மாற்ற விழிப்பு ணர்வு தினத்தைக் கொண்டாடும் விதமாக, (அக் டோபர் 24 முதல் 28 வரை) அரசு மகளிர் மேல்நிலை ப் பள்ளியில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடந்தது.

புதிய மரக்கன்றுகள் நடுதல், காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வுக் கல்வி வகுப்புகள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டன.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய தலைப்புகளில் ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டி யில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பட்டன.

மரக்கன்றுகள் நடுதல், காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வுக் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்ட. ன.விழிப்புணர்வில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய சுற்றுச்சூழ ல் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து வலியுறுத்தப் பட்டது.

கடற்கரைகளில் தூய்மையைப் பேணுதல்,, உயிர்யிரினங்களைப் பாதுகாத்தல் பிளாஸ்டிக் மாசுகடு மையான பாதிப்பு மரம் நடுதலின் அவசியம் கட லோர சமூகங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகா த்தல் என ஊர்வலம் தனியார் வங்கி, கடைத்தெரு பேரூராட்சி, தெருக்கள் வழியாக பள்ளியை சென்ற டைந்தது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் விழிப்புணர்வு உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.பல்வேறு போ ட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுக ள் வழங்கப்பட்டது. பள்ளியின் ஆசிரியர் ஆசிரியை கள் மாணவிகள் அலுவலக பணியாளர்கள் கலந் து கொண்டனர்.



கடலூர் வருவாய் மாவட்ட அளவிலான under14 மாணவர்களுக்கான கால்பந்து போட்டி நெய்வேலி NLC ஆண்கள் மேல் நிலை பள்ளியில் நடை பெற்றது. அதில் திட்டக்குடி அரசு ஆண்கள் மேல் நிலை பள்ளி மாணவர்கள் முதல் இடம் பிடித்து பள்ளிக்கு பெருமை சேர்த்து உள்ளார்கள். ராணிப்பேட்டை மாவட்டத்தில் நடை பெறும் மாநில அளவிளான கால்பந்து போட்டிக்கு தகுதி பெற்று உள்ளனர்கள்

## பைசா பஜார் சர்வே:

# 42% கிரெடிட் கார்டு பயனர்கள் தீபாவளியில் ₹50,000க்கும் மேல் செலவு!

தீபாவளியில் உயர் மதிப்புள்ள கொள்முதல்கள் அதிகம் இடம் பெற்றுள்ளதாக பைசாபஜார் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

கிரெடிட் கார்டைப் பயன்படுத்தியவர்களில் 42% பேர் ₹50,000க்கும் அதிகமாக செலவிட்டதாக ஆய்வு கூறுகிறது. இதில் 22% பேர் ₹50,000 முதல் ₹1 லட்சம் வரை, மேலும் 20% பேர் ₹1 லட்சத்திற்கும் மேல் செலவிட்டுள்ளனர். வீட்டு உபயோகப் பொருட்கள் (25%), மொபைல்/கேட்ஜெட்டுகள் (23%) மற்றும் ஆடை (22%) ஆகியவை அதிகம் வாங்கப்பட்ட பிரிவுகளாக இருந்தன.

"பெரிய அளவிலான பண்டிகை கொள்முதல்களில் கிரெடிட் கார்டு பயன்பாடு அதிகரித்திருப்பது வசதி மற்றும் அதிக மதிப்பை நாடும் நுகர்வோரின் விருப்பத்தை காட்டுகிறது.

இன்றைய வாடிக்கையாளர்கள் பண்டிகை சலுகைகள் மற்றும் கார்டு ரிவார்ட்ஸ்களைப் பயன்படுத்தி திட்டமிட்ட முறையில் செலவழிக்கிறார்கள்," என பைசாபஜார் நிறுவனத்தின் CEO சந்தோஷ் அகர்வால் கூறினார்.

இதேபோல், கிரெடிட் கார்டைப் பயன்படுத்துபவர்களில் 91% பேர் கார்டு சலுகைகளை மையமாக வைத்து வாங்கியிருப்பதாகவும், கேஷ்பேக் (20%), கோபிராண்டெட் ஆஃபர்கள் (19%) மற்றும் ரிவார்டு பாயிண்ட்ஸ் (18%) முக்கிய ஊக்கங்களாக இருந்தன என ஆய்வு தெரிவிக்கிறது.

ஆய்வில் பங்கேற்றவர்களில் 48% பேர் ஆன்லைன், ஆஃப்லைன் என இரண்டையும் இணைத்து வாங்கியதாக கண்டறியப்பட்டது. "கேஷ்பேக், ரிவார்ட்ஸ், நோகாஸ்ட் EMI போன்ற சலுகைகளால் கிரெடிட் கார்டுகள் பண்டிகை கால வாங்குதல்களில் முக்கிய கருவியாக மாறியுள்ளன," என பைசாபஜார் நிறுவனத்தின் கிரெடிட் கார்டு பிரிவு தலைவர் ரோஹித் சிப்பார் தெரிவித்தார். வாங்குபவர்களில் 83% பேர் ஆமசான், ஃப்ளிப்கார்ட் போன்ற தளங்களில் சிறந்த சலுகைகள் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளனர்.



தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கம் சார்பாக 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்





தென்காசி,அக்.31

தென்காசி மாவட்ட அரசு விழாவில் பங்கேற்று சிறப்பித்துக்கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் நேரு , ஐ. பெரியசாமி, கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் , தங்கம் தென்னரசு , கீதாஜீவன், ராஜகண்ணப்பன் , மனோ தங்கராஜ் , நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னுடைய அருமை தங்கை கனிமொழி கருணாநிதி , ராபர்ட் புரூஸ் , டாக்டர் ராணி ஸ்ரீகுமார் , சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜா , சதன் திருமலைகுமார், அப்துல் வகாப் , பழனி நாடார் , முன்னாள் பேரவையின் தலைவர் ஆவுடையப்பன் , முன்னாள் அமைச்சர்கள் பூங்கோதை ஆலடி அருணா . தங்கவேல் , கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர் ஜெயபாலன் உள்ளிட்ட கழக , உள்ளாட்சி அமைப்புகளின் , அரசு உயர் அலுவலர்களே, பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெறுவதற்காக வருகை தந்திருக்கக் கூடிய பயனாளிகளே, என்னுடைய பாசத்திற்கும், பேரன்பிற்கும் உரிய மகளிர் சுயஉதவிக் குழுவில் இடம் பெற்றிருக்கக்கூடிய தாய்மார்களே, சகோதரிகளே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம். எங்கும் இயற்கை எழில் கொஞ்சும் மேற்குத் தொடர்ச்சி மலையும் உச்சந்தலையைப் போல உள்ளத்தையும் இதமாக்கும் குற்றாலமும் – இப்படி தூறலும்சாரலும்கொண்டு மக்கள் மனங்களை குளிர்விக்கும் மண் இந்த தென்காசி மண். வடக்கே ஒரு காசி என்றால், தெற்கே ஒரு தென்காசி என்று சொல்லத்தக்க வகையில் காசி விஸ்வநாதர் கோவில் அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட கோவில் குடமுழுக்கை 19 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஏப்ரல் மாதத்தில் நடத்திய மகத்தான அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு. அதிலும்,இந்தநிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு, ஆலங்குளத்தில் “கலைஞர்கனவு இல்லம்” திட்டத்தில் கடந்த மாதம் “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” நிகழ்ச்சியில் பேசிய அன்பு மகள் பிரேமா அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு வீடு வழங்கக்கூடிய ஆணையை நாங்கள் வழங்கினோம். இப்போது விரைந்து அங்கு வீடு கட்டக்கூடிய பணி வேகம், வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல, இப்போது மேடையில், 1 இலட்சமாவது பயனாளியான இலத்தூர் கிராமத்தைச் சார்ந்த சுமதி முத்துக்குமார் என்பவரின் கனவு இல்லத்திற்கான சாவியை உங்கள் முன்னால் நான் வழங்கியிருக்கிறேன்.

காலுக்கு கீழ் கொஞ்சம் நிலமும் தலைக்கு மேல் ஒரு கூரையும் வேண்டும் என்பது, ஒவ்வொரு மனிதனின் கனவு! வீடு என்பது ஒவ்வொருடைய குடும்பத்தின் கனவு!

குடிசைகளுக்குப் பதிலாக நிரந்தர வீடுகளை கட்டித் தரவேண்டும் என்று குடிசையில்லா தமிழ்நாடு அமைய வேண்டும் என்று ஏராளமான திட்டங்களை உருவாக்கிய நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி தான் தலைவர் கலைஞர் அவர்களின் கனவையும் ஏராளமான குடும்பங்களின் கனவுகளையும், ஒருசேர நிறைவேற்றுகின்ற மகிழ்ச்சியோடு உங்களிடம் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாகவும், வேகமாகவும் செயல்படுத்தி வரக்கூடிய ஊரக உள்ளாட்சித் துறைக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவீரன் பூலித்தேவன் தளபதி ஒண்டிவீரன் தேவநேயப் பாவாணர் போன்ற பெருமக்களைத் தந்து பெருமைகளை கொண்ட இந்த தென்காசி மாவட்டத்தில் மகத்தான அரசு விழாவை மாபெரும் மக்கள்திருவிழாவாக மாநாட்டைப் போல ஏற்பாடு செய்திருக்கிறார் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் . அவருடைய அரசியல் பொது வாழ்க்கையில் இதைப் போல, எத்தனையோ பிரமாண்டமான மாநாடுகளை, நிகழ்ச்சிகளை அவர் நடத்தி இருந்தாலும், இந்த நிகழ்ச்சி எல்லாவற்றிற்கும் மகுடம் வைப்பதைப் போல அமைந்திருக்கிறது.

வருவாய்த் துறை அமைச்சராக அவரின் மகத்தான சாதனை என்ன தெரியுமா? இதுவரைக்கும் இல்லாத அளவுக்கு இவருடைய Periodல்தான் தமிழ்நாடு முழுவதும் இதுவரைக்கும் 10 இலட்சத்து 26 ஆயிரத்து 743 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கி இருக்கிறோம்!

வருவாய்த் துறை சார்பில், 17 விதமான சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் விண்ணப்பித்த நான்கரை இலட்சம் பேருக்கு சான்றிதழைத் தராமல் வைத்திருந்தார்கள். எல்லோருக்கும் சான்றிதழை வழங்குவதுதான் இந்த சாத்தூராரின் சாதனை!

இப்படி தன்னுடைய அனுபவத்தாலும், அமைதியான செயல்களாலும் அரசுக்கு நற்சான்றிதழை பெற்றுத் தந்திருக்கக்கூடிய அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

அதேபோல, அவருக்குத் துணை நின்று பணியாற்றியிருக்கக்கூடிய தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் தென்காசி மாவட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, தமிழ்நாட்டை அனைத்து வகையிலும், அனைத்துத் துறைகளிலும்முன்னேற்றி வருகிறோம்.

நீங்கள் செய்தித்தாள்களில் பார்த்திருப்பீர்கள்... தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள்... தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று இதுபோன்ற அரசு விழாக்களில் நான் பங்கேற்று,

அந்தந்த மாவட்டத்துக்குத் தேவையான திட்டங்களை தொடங்கி வைத்துக் கொண்டிருக்கிறேன்! தென்காசி மாவட்டத்துக்கு இன்னும் இன்னும் செய்யவேண்டும் என்ற எங்கள் எண்ணத்தின் விளைவாக, பத்து புதிய அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

## 10 அறிவிப்புகள்

முதல் அறிவிப்பு –

புதிதாக உருவாக்கப்பட்ட இந்த தென்காசி மாவட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு 15 கோடி ரூபாய் செலவில், 11 புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

இரண்டாவது அறிவிப்பு –

சங்கரன்கோயில், மேலநீலிதநல்லூர் பகுதிகளில் இருக்கின்ற பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய குருக்கள்பட்டி சிப்காட் திட்டத்தின் நீர்த் தேவைகளை நிறைவு செய்ய, 52 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

மூன்றாவது அறிவிப்பு –

தென்காசி மாவட்டத்தில் இருக்கின்ற மாற்றுத் திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சேவை மையம் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

நான்காவது அறிவிப்பு –

கடையம் ஊராட்சி ஒன்றியத்துக்கு, 6 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

ஐந்தாவது அறிவிப்பு –

சிவகிரி, கடையநல்லூர், சங்கரன்கோவில் மற்றும் திருவேங்கடம் வட்டங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில், இந்த பகுதிகளில் இருக்கின்ற பல்வேறு முக்கியகண்மாய்கள் 12 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்படும்.

ஆறாவது அறிவிப்பு –

தென்காசி வட்டம், சிவசைலம் கிராமத்தில் இருக்கின்ற கடனா அணை 4 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்படும்.

ஏழாவது அறிவிப்பு –

கடையநல்லூர் வட்டத்தில் இருக்கின்ற வரட்டாறு பாசன அமைப்பின் கீழுள்ள அணைக்கட்டுகள் மற்றும் குளங்கள் 4 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

எட்டாவது அறிவிப்பு –

செங்கோட்டை வட்டத்தில், அடவி நயினார்கோயில் அணைத் திட்டத்தின் கீழுள்ள அணைக்கட்டுகள், கால்வாய்கள் மற்றும் குளங்கள் 5 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்படும்.

ஒன்பதாவது அறிவிப்பு –

வீரகேரளம்புதூர் வட்டத்தில் இருக்கின்ற மாறாந்தை கால்வாய் 2 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்படும்.

பத்தாவது அறிவிப்பு –

ஆலங்குளத்தில் இருக்கின்ற அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 1 கோடி ரூபாய் செலவில் குடிநீர் மற்றும் பிற வசதிகள் செய்து தரப்படும். இந்த பத்து முத்தான அறிவிப்புகளும் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்று நான் நம்புகிறேன்.

## கிருஷ்ணகிரியில்
## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த சிறப்பு கூட்டம்!



கிருஷ்ணகிரி,அக்.31

இந்திய தேர்தல் ஆணையத்தின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வருவாய் கோட்டாச்சியர் அலுவலகங்களில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவர திருத்தப்பணிகள் குறித்த அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைப்பெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் தலைமையில் நடைப்பெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக் குரல், ஒசூர் சார் ஆட்சியர் அக்ரி சோத்தி, துணை ஆட்சியர் அபிநயா, வருவாய் கோட்டாச்சியர் ஷாஜஹான் மற்றும் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர்கள் கலந்துக் கொண்ட இந்தக் கூட்டத்தில் தளி, ஒசூர், வேப்பனஹள்ளி, கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை ஆகிய ஆறு சட்ட மன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்காளர் பட்டியலில் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் மேற்கொள்ளபட உள்ளது,

இப்பணிகள் தொகுதி வாரியாக தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தலைமையிலும் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர்கள் முன்னிலையில் நடத்தப்பட உள்ளது,

இந்தப் பணிகளில் வாக்காளர் பட்டியலில் தவறுதலாக பெயர்கள் இடம் பெற்று இருந்தால் அவர்களின் பெயர்கள் நீக்கப்படும் எக்காரணம் கொண்டு தகுதியான வாக்காளார் பெயர்கள்

நீக்கப்படமாட்டது

குறிப்பாக தகுதியான வாக்காளர்களின் பெயர்கள் விடுப்பட்டு இருந்தால் அவர்களின் பெயர்கள் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் இப்பணிகளில் அங்கிகரிக்கப்பட்ட கட்சியினர் தகுந்த ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று ஆட்சியர் தினேஷ்குமார் கேட்டுக் கொண்டார்.

அப்போது தேர்தல் நடத்தும் அலுவலர்களான கீதா ராணி, ரமேஷ் மற்றும் தளி திமுக சட்ட மன்ற உறுப்பினர் பிரகாஷ், காங்கிரஸ் கட்சியின் திட்ட குழு உறுப்பினர் ரகு, மாநில பேச்சாளர் ஜேசுதுரைராஜ், நகர தலைவர் லலித் ஆண்டனி, தேசிய வாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மாவட்டத் தலைவர் சந்திரமோகன், அதிமுக கட்சியின் நகர செயலாளர் கேசவன், பொதுக்குழு உறுப்பினர் கோவிந்தசாமி, தேமுதிக கட்சியின் ஒன்றிய செயலாளர் முருகன், பொதுச் செயலாளர்

ரோஷன் ரஷீத், ஜெய்சன் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.



குமரி மாவட்ட கலெக்டர் அழகுமீனா சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட செல்வம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




## வாணியம்பாடி நகராட்சி 1-வது வார்டு பகுதியில் சிறப்பு வார்டு கூட்டம்!

வாணியம்பாடி, அக்.31

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சி 1 வது வார்டு பகுதியில் சிறப்பு வார்டு கூட்டம் கோயிலுக்கு சொந்தமான மண்டபத்தில் வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வார்டு உறுப்பினரும் நகரமன்ற தலைவருமான உமா சிவாஜி கணேசன் தலைமை வகித்தார். கூட்டத்தில் நகராட்சி ஆணையாளர் ரகுராமன் கலந்து கொண்டு பகுதி மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

கூட்டத்தில் பகுதி மக்கள் பல்வேறு குறைகள் மற்றும் கோரிக்கைகள் முன் வைத்து பேசினர்.

கூட்டத்தில் நகராட்சி நிர்வாக அலுவலர் ஜெயபிரகாஷ், முத்துவல்லி அமீர் பாஷா, பாரூக் அஹமத், அனீஸ் அஹமத், முன்னாள் நகரமன்ற உறுப்பினர் ஷஃபி மற்றும் பகுதி மக்கள் கலந்து கொண்டனர்.

இதே போல் நகராட்சி 2 வது வார்டு பகுதிக்கான சிறப்பு வார்டு கூட்டம் பெருமாள் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நகரமன்ற தலைவர் உமா சிவாஜி கணேசன் தலைமை வகித்தார்.

இதில் நகராட்சி ஆணையாளர் ரகுராமன், நகராட்சி நிர்வாக அலுவலர் ஜெயபிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு பகுதி மக்களின் கோரிக்கை கேட்டறிந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் பகுதி மக்கள் கலந்து கொண்டனர்.

## தருமபுரியில் முருகன் கோவில்களில் கந்த சஷ்டி சூரசம்ஹார விழா!



தருமபுரி அக்.31

தருமபுரி கடைவீதி, குமாரசாமி பேட்டை, அன்னசாகரம் ஆகிய பகுதியில் உள்ள முருகன் திருக்கோயில்களில் கந்த சஷ்டி சூரசம்ஹார விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. தருமபுரி கடை வீதியில் உள்ள ஸ்ரீ அம்பிகா பரமேஸ்வரி உடனாகிய மருத வானேஸ்வரர் திருக்கோவிலில் கந்த சஷ்டி லட்சார்ச்சனை திருவிழா கடந்த 22 ஆம் தேதி தொடங்கியது. விழாவின் முக்கிய நாளான நேற்று (27/10/2025) திங்கட்கிழமை இரவு அலங்கரிக்கப்பட்டு சுப்பிரமணியசுவாமி மற்றும் சூர பத்மநாபன் புறப்பாடு நிகழ்ச்சி வானவேடிக்கையுடன் நடைபெற்றது. இந்தநிகழ்ச்சியில் சூரபத்மனை முருகப்பெருமாள் வதம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து சாமிக்கு உபகர பூஜைகள் மற்றும் மகா தீபாராதனைகள் நடைபெற்றது. இதில் வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா என்ற பக்தி கோஷத்துடன் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்த விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இன்று செவ்வாய்க்கிழமை (28/10/2025) காலை சுவாமிக்கு சிறப்பு பூஜைகள், ஆராதனைகள் நடைபெற்றது . இதை தொடர்ந்து இரவு ஏழு மணி அளவில் முருகன், வள்ளி, தெய்வானை திருக்கல்யாண உற்சவமும் , சுவாமி திருவீதி உலாவும் நடைபெற்றது. இதில் ஏராளமான பொதுமக்கள், பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கந்த சஷ்டி விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## ஆம்பூர் அருகே கூலித் தொழிலாளிக்கு ரூ.2 கோடியே 76 லட்சம் ஜி.எஸ்.டி வரி; அதிர்ச்சி - போலீசில் புகார்!



ஆம்பூர், அக்.31

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த வெங்கடசமுத்திரம் ஊராட்சிக்குட்பட்ட விநாயகபுரம் பகுதியை சேர்ந்தவர் ராஜ்குமார். இவர் கூலி வேலை செய்து வரும் நிலையில் இவருக்கு கடந்த சில தினங்களுக்கு முன்பு காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் உள்ள ஜி.எஸ்.டி அலுவலகத்தில் இருந்து ராஜ்குமார் சென்னை பல்லாவரத்தில் ஏ.எம்.ஆர். டிரேடர்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வருவதாகவும், இதற்கு 2,76,82,898 ரூபாய் வரி செலுத்த வேண்டும் என்ற கடிதம் வந்துள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த ராஜ்குமார் இதுகுறித்து உமராபாத் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரை பெற்ற உமராபாத் காவல்துறையினர் இதுகுறித்து திருப்பத்தூர் மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள பொருளாதார குற்றப்பிரிவில் புகார் அளிக்குமாறு தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுகுறித்து ராஜ்குமார் கூறியதாவது:

தான், கூலி வேலை செய்து வருவதாகவும், தன்னுடைய ஆதார்கார்ட், மற்றும் பான்கார்ட், ஆகியவற்றை பயன்படுத்தி சிலர் தன்னுடைய பெயரில் போலியான நிறுவனம் நடத்தி 2 கோடிக்கும் மேல் மோசடி செய்துள்ளதாகவும், இதுகுறித்து அதிகாரிகள் உரிய விசாரணை மேற்க் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார், மேலும், ஆம்பூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தொடர்ந்து கூலித் தொழிலாளர்களை குறிவைத்து, சில கும்பல் அவர்களின் ஆதார் மற்றும் பான்கார்டினை பயன்படுத்தி பலகோடி ரூபாய் மோசடி செய்து வருவது தொடர்கதையாகி வருகிறது. இது குறித்து அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.